

கழக தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் 72 வது பிறந்தநாளை முன்னிட்டு புதுக்கோட்டை வடக்கு மாவட்டம் அன்னவாசல் தெற்கு ஒன்றியம் மற்றும் அன்னவாசல் பேரூர் கழகம் சார்பில் “கோடைகால தண்ணீர் பந்தல்” அன்னவாசல் தெற்கு ஒன்றிய செயலாளர் கே.எஸ். சந்திரன் தலைமையிலும், அன்னவாசல் பேரூர் கழக செயலாளர் எம்.எஸ்.ஏ.முகமது ரிசா முன்னிலையிலும், புதுக்கோட்டை தெற்கு மாவட்டச் செயலாளர் சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, புதுக்கோட்டை வடக்கு மாவட்ட கழக செயலாளர் வழக்கறிஞர் கே.கே.செல்லபாண்டியன், மாநிலங்களவை உறுப்பினர் எம்.எம்.அப்துல்லா ஆகியோர் கோடை கால தண்ணீர் பந்தலை திறந்து வைத்தனர். பொதுமக்களுக்கு நீர்மோர் மற்றும் தர்பூசணி, கொய்யா, உள்ளிட்ட பழங்கள் வழங்கப்பட்டது. நிகழ்வில் பொதுக்குழு உறுப்பினர் ராப்பூசல் எம்.செந்தில்குமார், மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் கே.எஸ்.ச.இளையச்சூரியன், எஸ்.வி.ஆர்.ஸ்டாலின், சுந்தர்ராஜ், ஆர்.கே.சபாபதி, அரசு வழக்கறிஞர் உஷா ராணி, மாவட்ட பிரதிநிதி கருப்பையா, பேரூர் துணை செயலாளர் மதியழகன், நாகராஜ், ரெங்கராஜ் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் பங்கேற்றனர்.



கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு சேலம் கிழக்கு மாவட்டம் அயோத்தியாப்பட்டணம் தெற்கு ஒன்றிய தி.மு.க. செயலாளர் ஏ. விஜயகுமார் ஏற்பாட்டில் உடையாப்பட்டி ஊராட்சியில் 800 பெண்களுக்கு குத்துவிளக்கை கிழக்கு மாவட்ட செயலாளர் எஸ். ஆர். சிவலிங்கம், சுற்றுலா துறை அமைச்சர் இரா.ராஜேந்திரன் ஆகியோர் வழங்கினார். இந்நிகழ்ச்சியில் மு.ரா.கருணாநிதி, செந்தில்குமார், அகரம் ராஜேந்திரன், குமரவேல், சின்னத்தம்பி , இன்பராசு, செந்தில் காந்திமதி,சின்னச்சாமி, அய்யாதுரை, சாமிநாதன், கோபால், உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

### தஞ்சை தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில்

# கழகத் தலைவர் , முதல்வர் பிறந்தநாள் விழா பொதுக்கூட்டம்!

## அமைச்சர் கோவி.செழியன் தலைமை! திருச்சி என்.சிவா சிறப்புரை! மாவட்டப் பொறுப்பாளர் தி.பழநிவேல் அறிக்கை!

தஞ்சாவூர் மார்ச்.07.

தமிழ்நாடு முதல்வர், கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்களின் 72 வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு இன்று (07.03.2025) மாலை 06.00 மணிக்கு பட்டுக்கோட்டையில் நடைபெற உள்ள பொதுக்கூட்டத்தில் கழக தோழர்கள் திரளாக கலந்து கொள்ள மாவட்ட பொறுப்பாளர் தி.பழநிவேல் அறிக்கை வெளியிட்டுள்ளார்.



அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் : தமிழ்நாடு முதல்வர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் 72வது பிறந்தநாளை தஞ்சை தெற்கு மாவட்டக் கழகத்தின் சார்பில் சிறப்பாக கொண்டாடி வருகிறோம். அதனை தொடர்ந்து இன்று 07.03.2025 மாலை பட்டுக்கோட்டை அஞ்சா நெஞ்சன் அழகிரி சிலைக்கு அருகில் உயர் கல்வித்துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன் தலைமையில் மாபெரும் கழகத் தலைவரின் பிறந்தநாள் விழா பொதுக் கூட்டம் சிறப்பாக நடைபெற உள்ளது.

பொதுக்கூட்டத்தில் கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் எஸ்.எஸ்.பழநிமாணிக்கம், தஞ்சை மத்திய மாவட்டச் செயலாளர் துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ, ச.முரசொலி எம்.பி, கா.அண்ணாதுரை எம்.எல்.ஏ, நா.அசோக்குமார் எம்.எல்.ஏ, மாநில தணிக்கைக்குழு உறுப்பினர் ப.பாலசுப்ரமணியன் ஆகியோர் முன்னிலை வகிக்க உள்ளனர்.

மாநில கொள்கைப் பரப்புச் செயலாளர் திருச்சி என்.சிவா சிறப்புரையாற்றுகிறார்.

கூட்ட முடிவில் பட்டுக்கோட்டை நகரக் கழகச் செயலாளர் எஸ்.ஆர்.என். செந்தில் குமார் நன்றியுரையாற்றுகிறார்.

அதுசமயம் பொதுக் கூட்டத்திற்கு மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், நகர, ஒன்றிய, பேரூர் செயலாளர்கள், நிர்வாகிகள், மாவட்டக் கழக பிரதிநிதிகள், சார்பு அணிகளின் நிர்வாகிகள், முன்னாள், இந்நாள் உள்ளாட்சி பிரதிநிதிகள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு தஞ்சை தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் தி.பழநிவேல் அறிக்கை வெளியிட்டுள்ளார்.

### நாடாளுமன்ற உறுப்பினர் மேம்பாட்டு திட்டத்தில்

# அத்திக்குன்னா அரசு உயர்நிலைப்பள்ளியில் ரூ.11.20 லட்சத்தில் காலை சிற்றுண்டிக் கூடம்!

## கழக துணைப் பொதுச் செயலாளர் ஆ.ராசா எம்.பி. திறந்து வைத்தார்!

பந்தலூர், மார்ச் 7-

அத் திக்குன்னா அரசு உயர்நி லைப்பள்ளி வளாகத்தில் பாராளுமன்ற உறுப்பினர் மேம்பாட்டு திட்ட நிதி ரூ.11.20 லட்சத்தில் கட் டப்பட்டுள்ள காலை சிற்றுண்டி கூடத்தை ரிப்பன் வெட்டி ஆ.ராசா எம்.பி. திறந்து வைத்தார்.

பந்தலூர் மேற்கு ஒன்றியம் கொளப்பள்ளி மற்றும் நெல்லியாளம் நகரம் உப்பட்டி பகுதிகளில் முதலமைச்சர் மு.க ஸ்டாலின் 72 வது பிறந்தநாள் விழா வில் தி.மு.க. துணை பொதுச் செயலாளரும் நீலகிரி எம்.பி.யுமான ஆ.ராசா கலந்து கொண்டார். இதைத்தொ டர்ந்து, ஏழை எளிய மக்களுக்கு நலத் திட்ட உதவிகள் வழங்கினர்.

இதையடுத்து, ஆ.ராசா எம்.பி. பேசியதாவது:

மத்தியில் ஆட்சி செய்து வரும் மோடி அரசாங்கம் மீண்டும் குலத்தொழில் திட்டத்தை கொண்டு வரும் வகையில் மூன்றாம் வகுப்பு. ஐந்தாம் வகுப்பு, எட்டாம் வகுப்பு என தேர்வுகளை வைத்து மாணவ மாண விகளின் கல்வி தகுதியை குறைத்து தந்தை என்ன வேலை செய்கிறாரோ, அதே வேலையை குழந் தைகளும் செய்ய வேண் டும் என்ற குலத் தொழில் திட்டத்தை கொண்டு வர மோடி அரசு முயற்சிக்கிறது.

இந்த கல்விக்கொள்கையை ஏற்றுக் கொள்ள முடியாது என தமிழ்நாடு அரசு எதிர்ப்பு தெரிவிப்பதால் ஒன்றிய அரசின் கல்வி துறையின் மூலம் வழங்கப் பட வேண்டிய மூன்றாயிரம் கோடி நிதியை தர மறுப்பது ஏற்புடையதல்ல.

இந்தியாவில் 10 சதவிகிதம் ஜி.எஸ்.டி. வரி தமிழ்நாடு அரசு ஒன்றிய அரசுக்கு செலுத்தி வருகிறது. தமிழ்நாட்டின் ஜி.எஸ்.டி. வரியை கொண்டு வட மாநிலங்களான உத்திர பிரதேசம், மத்திய பிரதேசம் போன்ற மாநிலங்களுக்கு ஒன்றிய அரசு வழங்கி தமிழ்நாட்டை வஞ்சித்து வருகிறது. இதனை துணிச்சலோடு கேள்வி கேட்ட ஒரே தலைவர் நமது முதலமைச்சர். இதனை மனதில் கொண்டு தமிழ்நாடு. கேரளா, கர்நாடகா போன்ற திராவிட மொழிகளை கொண்ட தென் இந்தியாவை புறக்கணித்து எம்.பி.க்களை குறைத்து வடமாநிலங்களில் எம்.பி.களின் எண்ணிக்கை அதிகரித்து இந்தியை வைத்துக் கொண்டு நாட்டை பி.ஜே.பி. யால் ஆள முடியும் என்ற சதித்திட்டத்தை மோடி அரசு தீட்டி வருகிறது. தமிழ் மொழி, தமி ழர்களின் அடையாளத்தை அளிக்கும் நோக்கில் செயல்படுகிறது. இதை எதிர்த்து எந்த மாநிலத்தை சேர்ந்த முதல்வர்கள் குரல் கொடுத்தாலும் அவர்கள் மீது வருமான வரி, சி.பி.ஐ. அமலாக்கத்துறையை வைத்து மிரட்டுகிறது. இதற்கு எதுவும் அஞ்சாமல் இந்தியாவில் உள்ள அனைத்து தலைவர்களும் மோடியின் சர்வாதிகாரத்திற்கு அச்சப்பட்டு கண்டும் காணாமல் இருந்து வருகின்றனர். இந்நிலையில் தமிழ்நாட்டின் முதலமைச்சர் மட்டுமே ஒன்றிய அரசுக்கு எதிர்ப்பு தெரிவித்து தமிழர்களுக்கு எதிராக கொண்டு வரும் அனைத்து விரோத செயல் களை தடுத்து தமிழர்களை அறங்காவலராக பாது காத்து வருகிறார். இவ்வாறு ஆ.ராசா பேசினார். இந்த நிகழ்ச்சிகளில் மாவட்ட தி.மு.க. செயலாளர் கே.எம் ராஜு, ஒன்றிய செயலாளர் சுஜேஸ், சிவா னந்த ராஜா, லியாக் தலி நகர செயலாளர் சேகர், மாநில பொறியாளர் அணி அமைப்பாளர் பரமேஷ் குமார், முன்னாள் சட்ட மன்ற உறுப்பினர் திராவிட மணி, மாவட்ட துணை செயலாளர் ரவிக்குமார், போஜன், ‘காசிலிங்கம் இளங்கோ, ராஜா, அமிர்தலிங்கம் உள்ளிட்ட ஏராளமானோர் பங்கேற்றனர். தொடர்ந்து, அத்திக் குன்னா அரசு உயர்நிலைப்பள்ளி வளாகத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் மேம்பாட்டு திட்ட நிதி ரூபாய் 11.20 லட்சத்தில் கட்டப்பட்டுள்ள காலை சிற்றுண்டி கூடத்தை ரிப்பன் வெட்டி ஆ.ராசா எம்.பி. திறந்து வைத்தார்.






ABACU ARTS
5ஆம் ஆண்டு நினைவு நாள்
நாள் : 07.03.2025 – வெள்ளிக்கிழமை
கலைஞரின் துணைக்கரமே! கழகத்தின் இலக்கியமே!!
இன்றைய முதல்வரின் வளர்ச்சியில் அன்றே அக்கறை கொண்ட
பேராசிரியப் பெருந்தகை
க.அன்பழகன்
அவர்கள் நினைவைப் போற்றுவோம்!
வணக்கத்துடன்
இராணிப்பேட்டை ஆர்.காந்தி
கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் / மாவட்ட கழக செயலாளர்
இராணிப்பேட்டை மாவட்ட தி.மு.க.




நாள் : 07.03.2025 வெள்ளிக்கிழமை
நேரம் : மாலை 5.00 மணி
இடம் : 5வது பிளாக், முத்தமிழ் நகர்
(சிவா மருத்துவமனை அருகில்)
சென்னை வடக்கு மாவட்டம், பெரம்பூர் வடக்கு பகுதி - 35வது வட்டம்
மாண்புமிகு
கழகத் தலைவர் தமிழக முதல்வர்
அவர்களின் 72வது பிறந்தநாளை முன்னிட்டு
மாபெரும் பொதுக்கூட்டம் மற்றும்
நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி
தலைமை :- இ.சையத் அலிகான்
மாவட்ட பிரதிநிதி – பெரம்பூர் வடக்கு பகுதி, 35வது வட்டம்
முன்னிலை
அ.முருகன் பெரம்பூர் வடக்கு பகுதி செயலாளர்
க.ஜெயராமன் பெரம்பூர் தெற்கு பகுதி செயலாளர்
R.S.கமலக்கண்ணன் மாவட்ட கழக துணை செயலாளர்
M.உமாபதி 35வது வட்ட கழக செயலாளர்
வரவேற்புரை :- M.சரவணன் மாவட்ட பிரதிநிதி
35வது வட்ட நிர்வாகிகள் :
B.செல்வராஜ் A.செல்வி P.செல்வமணி E.ரமேஷ் L.பிரதீப்குமார் S.ஜெயக்குமார் S.தினேஷ்
சிறப்புரை : தமிழ் க.அமுதரசன் கழக மாணவரணி துணை செயலாளர்
நலத்திட்ட உதவிகள் வழங்குபவர்
ஆர்.டி.சேகர் B.Com., B.L., MLA
சென்னை வடக்கு மாவட்ட பொறுப்பாளர்
டாக்டர் கலாநிதிவீராசாமி M.P
கழக அயலக அணி தலைவர்
திரு.கன்னிகை கோ.ஸ்டாலின்
பெரம்பூர் தொகுதி தேர்தல் பார்வையாளர்
மாநில, மாவட்ட நிர்வாகிகள் மற்றும் மாமன்ற உறுப்பினர்கள்
இரா.நரேந்திரன் இரா.கருணாநிதி வி.தயாளன் A.தமிழ்செல்வன் பா.மதிவாணன் T.கமலக்கண்ணன்
க.அமுல் A.R.R.மலைச்சாமி M.C சர்வ ஜெயா தாஸ் M.C க.சர்மிளாகாந்தி M.C C.ஆனந்தி M.C
நன்றியுரை : I.சல்மான்ஷெரிப் 35வது வட்ட கழக பொருளாளர்
நிகழ்ச்சி ஏற்பாடு : இ.சையத் அலிகான் மாவட்ட பிரதிநிதி
பெரம்பூர் வடக்கு பகுதி, 35வது வட்டம்




மார்ச் 07 2025
மன்னை நகரத்திற்கு
வருகை தரும்
கழக
இளந்தலைவரே!
தமிழ்நாட்டின்
துணை முதல்வரே!
வருக! வருக!!
மின்னும் மன்னை
மாண்புமிகு முனைவர் T.R.B.ராஜா Ph.d.,
தமிழ்நாடு அரசின் தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர்,
கழக தகவல் தொழில் நுட்பஅணி செயலாளர்.
மன்னை த.சோழராஜன் B.E.,
நகர் மன்ற தலைவர் – மன்னார்குடி,
மாநில மாணவரணி துணை செயலாளர்.
வீரா.கணேசன் B.Com.,
நகர செயலாளர், மன்னார்குடி.